PR/2019/

EMBASSY OF JAPAN

From the People of Japan

No. 20, R.G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka
Tel: +94-11-2693831~3, Fax : +94-11-2698629
E-mail: cultujpn@co.mofa.go.jp

PRESS RELEASE

19th July, 2019

**கிளிநொச்சியில் மீளக் குடியமர்த்தப்பட்ட சிறுவர்களுக்கு ஜப்பான் உதவி**

"கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக மீளக்குடியமர்த்தப்பட்ட சிறுவர்களுக்கு பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிக்கும் திட்டம்" பணிகளுக்கு 86,358 அமெரிக்க டொலர்களை (அண்ணளவான ரூ. 14.7 மில்லியன்) நன்கொடையாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது. அடிப்படைநிலை மனித பாதுகாப்பு செயற்திட்டங்களுக்கான (GGP) நிதி உதவி ஊடாக இந்த நன்கொடை வழங்கப்படும். இந்த நன்கொடைக்கான உடன்படிக்கை 2019 ஜுலை 18 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமாவின் வாசஸ்தலத்தில், மனிதநேய அபிவிருத்தி நிறுவனத்தின் (HDO) நிகழ்ச்சி பணிப்பாளர் ஜேசுராசா அமிர்தராஜ் ஆகியோரிடையே கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இந்த திட்டத்தினூடாக போதுமானளவு மற்றும் சௌகரியமான கல்விசார் சூழல் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். கிளிநொச்சி மாவட்டத்தின், பச்சிளப்பள்ளி பிரிவில் அமைந்துள்ள வேம்பொடுகேணி பாடசாலையில் இரு பாடசாலை கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும். தற்போது, தரம் 1 முதல் 11 வரை 214 மாணவர்கள் இந்த பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றனர். இருந்த போதிலும், போதியளவு வகுப்பறை வசதிகள் இன்மையால், சில வகுப்புகள் திறந்த வெளிகளில் முன்னெடுக்கப்படுகின்றன. இப்பிரதேசத்தில் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், எதிர்வரும் காலங்களில் குடித்தொகை அதிகரிப்பு ஏற்படும். 2019 இல், பாடசாலைக்கு அருகாமையில் 77 குடும்பங்கள் மீளக்குடியேற்றப்படவுள்ளனர். மீளத்திரும்பும் பிள்ளைகளுக்கு, பாதுகாப்பான வகுதிப்பறைகளை வழங்குவதாக அமைந்திருக்கும், பிரத்தியேகமான வகுப்பறை அலகு மற்றும் விசேட கல்வி பிரிவு போன்றன காணப்படும். தரம் 13 வரை மாணவர்களை கொண்டிருக்கும் வகையில் விஸ்தரிக்கப்படும். இப்பிரதேசத்தில் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு GGP ஊடாக ஜப்பானிய அரசாங்கம் உதவிகளை வழங்குவதுடன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இந்த திட்டம் உதவிகளை வழங்குவதாக அமைந்துள்ளது.

இந்த நன்கொடை தொடர்பாக அமிர்தராஜ் கருத்துத் தெரிவிக்கையில், "கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியில் இந்த பாடசாலை அமைந்துள்ளது. 2000 ஆம் ஆண்டில், மக்கள் இடம்பெயர்ந்தனர், யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அவர்கள் மீளத் திரும்ப ஆரம்பித்தனர். பல திறமையான பிள்ளைகள் காணப்படுகின்றனர். போதியளவு வகுப்பறை வசதிகளின்மை காரணமாக, மாணவர்கள் வேறு வழியின்றி, மர நிழல்களில் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர வேண்டியுள்ளது. மழை மற்றும் கடும் வெய்யில் காலப்பகுதிகளில் வகுப்புகளை முன்னெடுப்பது கடினமான காரியமாக அமைந்துள்ளது. யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாக, விசேட தேவை கொண்ட மாணவர்களும் காணப்படுகின்றனர். இவர்களுக்கு விசேட வகுப்பறை வசதிகள் தேவைப்படுகின்றன. இந்த திட்டத்தினூடாக இந்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். பாடசாலைக்கு சமூகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை எம்மால் அதிகரிக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், போதிய வகுப்பறை வசதிகளின்மையால் பாடசாலைக்கு சமூகமளிக்காமலிருக்கும் பிள்ளைகளுக்கு தமது கல்விச் செயற்பாடுகளை தொடரக்கூடிய வாய்ப்புகளை வழங்க முடியும். வேம்பொடுகேணி பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஊழியர்கள், மற்றும் பாடசாலையை சூழ வாழும் கிராமத்தவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என அனைவரும் ஜப்பானிய அரசாங்கத்தின் இந்த உதவி தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவதுடன், பெருமளவு வரவேற்றுள்ளனர்." என்றார்.

For further information, please contact;
Development Cooperation Section of the Embassy of Japan
Tel. 011-2693831 ext 225
Email: cultujpn@co.mofa.go.jp